**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 26.09.2022**
**----------------------------------------**

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக்கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண். 5**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் புரட்டாசி 13 ஆம் நாள் 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2022ம் தேதியன்று வெள்ளிக்கிழமை மதியம் 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN 67 AJ 6058 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய அதற்குண்டான செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு 18.08.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | சித்திக் சர்வீஸ் லூப்ரிகேசன் & ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | 53,900/- |
| 2 | N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | 52,752/- |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெறறு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி திரு.N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் முன்அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்திரவு நடவடிக்கையினை மேற்கொள்வதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.609/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.87, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை, பொது சுகாதாரத்துறை இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர், துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சிவகாசி உள்ளிட்ட அலுவலர்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் உத்திரவு மற்றும் அறிவுரைகளுக்கு ஏற்ப தேவையான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவதற்கும், விழிப்புணர்வு பொருட்கள் (IEC Materials) தயார் செய்வதற்கும், சுவர் விளம்பரம் வரைவதற்கும், பொது சுகாதாரம், தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் மேலாண்மை, கசடுகழிவு மேலாண்மை, தொற்று நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பொருட்கள் (IEC Materials) தயார் செய்தவற்கும், தூய்மைப்பணியாளர்களுக்கு அவ்வப்போது மருத்துவ முகாம் நடத்துவதற்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கும், தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் தொடர்பாக அவ்வப்போது பெறப்படும் அறிவுரைகளுக்கு ஏற்ப விழிப்புணர்வு பொருட்கள் தயார் செய்வதற்கும், விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கும் இதற்கான 2022-2023ம் ஆண்டிற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/-ற்கும் மேற்படி செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்வதற்கும், அவ்வப்போது பெறப்படும் உத்திரவு மற்றும் அறிவுரைகளுக்கு ஏற்ப உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்திக் கொள்வதற்கும், விழிப்புணர்வு பொருட்கள் தயார் செய்து கொள்வதற்கும், தேவையான ஒலிபெருக்கி வசதிகள், இருக்கை வசதிகள், பந்தல் வசதிகள் உள்ளிட்டவைகளை வாடகைக்கு அமைத்துக் கொள்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.655/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.88, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்காகவும், பேருந்து நிலைய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், 24 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள், தினசரி நகராட்சி காய்கறி சந்தைப்பகுதிகள், கோவில் திருவிழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் உள்ளிட்ட பகுதிகளை சுகாதாரமாக பராமரித்துக் கொள்ளும் பணிக்காகவும், கொரோனா (கோவிட்-19) வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிக்காகவும், கிருமிநாசினி சுண்ணாம்பு பவுடர் 2022-2023ம் ஆண்டு பயன்பாட்டிற்காக 10 டன் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்2, நாள்.10.11.2021ல் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.753/2017/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.89, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/2017/J1, நாள்.28.11.2017, இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 2227/VC II/S2/2016, நாள்.28.03.2017, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20751/J1/2019, நாள்.17.09.2019ல் அறிவுறுத்தியுள்ளபடி, இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், வீடுவீடாகச் சென்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்குத் தேவைப்படுவதாலும், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலைய பகுதிகள், காய்கறி மார்க்கெட் பகுதிகள், கோவில் திருவிழா நடைபெறும் பகுதிகள் மற்றும் அரசு விழாக்கள் நடைபெறும் பகுதிகள் ஆகியவற்றை எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டும், பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களை சுகாதாரமாக பராமரிக்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்ட இடங்களில் தெளிப்பதற்காகவும், கிருமி நாசினி பிளீச்சிங் பவுடரை மூன்றுமாத தேவைக்கான இருப்பை எப்பொழுதும் இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளபடியும், 2022-2023ம் ஆண்டு பயன்பாட்டிற்கு கிருமிநாசினி பிளீச்சிங் பவுடர் உத்தேசமாக 4 டன் தேவைப்படுகிறது. பருவகால மாற்றத்திற்கு ஏற்பவும், பொதுசுகாதாரப்பணி தேவைக்கேற்பவும் அவ்வப்போது வாங்கிக்கொள்வதற்கும், நகராட்சி நிர்வாக

இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 10608/2021/H2, நாள்.10.11.2021ல் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீட்டில் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்யவும், இதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.753/2017/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.90, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2571/2017/ஜே1, நாள்.28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.2920/2014/அ4, நாள்.20.10.2017 மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை கடித ந.க.எண்.இ3/1723/2020, நாள்.28.03.2022, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20751/ஜே1/2019, நாள்.17.09.2019 மற்றும் ந.க.எண்.23001/ஜே1/2019, நாள்.03.10.2019, மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சிவகாசி அவர்களின் கடித ந.க.எண்.0322/அ3/2022, நாள்.15.03.2022ல் அறிவுறுத்தியுள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 19.08.2022 அன்றைய காணொலி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ள படியும், பூச்சிகளினால் பரவக்கூடிய (Vector Borne Diseases) வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளைத் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் அலுவலகத்தில் உள்ள இரண்டு Pulse fogger இயந்திரம் மற்றும் மூன்று எண்ணம் Mini Fogger இயந்திரம் ஆகியவை பழுது ஏற்பட்ட வண்ணம் உள்ளது. பழுது நீக்கம் செய்வதற்கான செலவுகளும் அதிகமாக உள்ளது. மேலும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளிலும் முதிர் கொசுக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய கொசு ஒழிப்பு புகை பரவவிடக்கூடிய பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும் கொசுப்புகளை பரவவிடும் இயந்திரம், கைப்புகைத் தெளிப்பான் மற்றும் எரிவாயு கேன் கீழ்க்கண்டவாறு தேவைப்படுகிறது.

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கொசுப்புகை பரவவிடும் இயந்திரம்(Portable Thermal Fogger RPF – 10 – SP) | 3 எண்ணம் |
| 2 | கைப்புகைத் தெளிப்பான் (Mini Thermal Fogger HVS – 1000) | 5 எண்ணம் |
| 3 | எரிவாயு கேன் (Gas Cylinder Can) | 200 எண்ணம் |

மேற்குறிப்பிட்டுள்ள இயந்திரங்களை, பொது சுகாதாரத்துறை இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்2, நாள்.10.11.2021ல் அறிவுறுத்தியுள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் (GST வரி 10%) உடன் சேர்த்து ரூ.5.75 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.753/2017/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.91, நாள்: 30.09.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் எண். TN67BJ 8661 டாடா ஏ.சி. வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்துவிட்டதால் வாகனத்தை ஓட்டுவதற்கு சிரமமாக உள்ளது. எனவே புதியதாக பேட்டரி வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.4,500/- மற்றும் அதற்கு விலைப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.678/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.92, நாள்: 30.09.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7</u>**

சாத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள் மற்றம் மகப்பேறு ஆயா மற்றும் பொறியியல் பிரிவு குழாய் திருப்புநர், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர், நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர் ஆகிய பணியாளர்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கான சீருடை பணியாளர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப்பணியாளர்கள் | 17 | 14 | 31 |
| 2 | பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 3 | - | 3 |
| 3 | பொது சுகாதாரப்பிரிவு ஓட்டுநர்கள் | 6 | - | 6 |
| 4 | பொது சுகாதாரப்பிரிவு மகப்பேறு உதவியாளர்கள் | - | 2 | 2 |
| 5 | பொது சுகாதாரப்பிரிவு மகப்பேறு ஆயா | - | 1 | 1 |
| 6 | பொறியியல் பிரிவு குழாய் திருப்புநர் | - | 1 | 1 |
| 7 | நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர் | 1 | - | 1 |
| 8 | பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர் | 1 | - | 1 |

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மைப் பணியாளர்களுக்கு 2022-2023ம் ஆண்டு தேவைக்கான காலணிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | காலணி அளவு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1 | நம்பர்-5 | 0 | 1 |
| 2 | நம்பர்-6 | 0 | 2 |
| 3 | நம்பர்-7 | 3 | 3 |
| 4 | நம்பர்-8 | 4 | 4 |
| 5 | நம்பர்-9 | 5 | 4 |
| 6 | நம்பர்-10 | 2 | 0 |
| 7 | நம்பர்-11 | 2 | 0 |
| 8 | நம்பர்-12 | 1 | 0 |

மேற்கண்டவாறு 2022-2023ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற காதிகிராப்ட் நிறுவனம் மற்றும் சர்வோதயா சங்கம் மூலம் கொள்முதல் செய்யவும், தையற்கூலி வழங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.763/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.93, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

சாத்தூர் நகராட்சி ஆணையாளரின் 09.01.2018ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண்.1582/2015/எச்1ல் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 1,2,6,7,8 ஆகிய பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 36 தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்தம் முறையில் வழங்கிடவும், 01.07.2019ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண்.1582/2015/எச்1ல் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 3,4,5,12,13,14,15,16,17 ஆகிய பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 41 தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்தம் முறையில் வழங்கிடவும், சென்னை ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி ஒப்பந்தக்காலம் முறையே 21.01.2021 மற்றும் 30.06.2022ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் ஏற்கனவே பயன்படுத்தி வரும் 77 (36+41) தூய்மைப் பணியாளர்களை புதிய டெண்டர் கோரி பணி உத்திரவு வழங்கும் வரை தொடர்ந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.54, நாள்.22.07.2022ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்படி தொடர்ந்து இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தனியார் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் பணியாளர்கள் பெற்று வரும் ஊதியம் குறைவாக உள்ளதால் தூய்மைப்பணிக்கு வராமல் தவிர்த்து வருகின்றனர் எனவும், அருகாமையில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு ஆலைகளுக்கு அதிக ஊதியத்தில் பணிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும், இத்தகைய சூழ்நிலையில் நகராட்சி தூய்மைப்பணியினை முழுமையாக தொய்வில்லாமல் செயல்படுத்திட விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ஊதியம் மற்றும் இதர படிகள் வழங்கக் கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 02.10.2021ம் தேதிய ந.க.எண். 21787/21/EA2 உத்திரவுபடி இந்நகராட்சியில் நிரந்தர பணியாளர்களை தவிர்த்து தேவைப்படும் தூய்மைப்பணியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோரை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்திக் கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.3420/21/எச்1, நாள்.13.10.2021 மூலம் நகராட்சிளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துரு தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

கடந்த, 07.07.2022ம் தேதிய தினமலர் நாளிதழில் விருதுநகர் மாவட்டத்தில் ஒப்பந்த தூய்மைப்பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படாததால் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், தூய்மைப்பணிகள் சரிவர நடைபெறவில்லை எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும், ஒப்பந்த தூய்மைப்பணியாளர்கள் கடந்த 22.08.2022 அன்று நகர்மன்றத் தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களை நேரில் சந்தித்து ஊதிய உயர்வு கோரி முறையிட்டுள்ளனர்.

ஆகவே, இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலமாக தூய்மைப் பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து அனுமதி வரும் வரை இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தொய்வில்லாமல் முழுமையாக மேற்கொள்ளும் பொருட்டு, தற்போது பணி மேற்கொண்டுவரும் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், சென்னை நிறுவனத்திற்கு 2021-2022ம் ஆண்டு விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தூய்மைப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் (ரூ.428.00 + இதர படிகள்) கணக்கீடு செய்து வழங்கிடவும், ஏற்கனவே உள்ள ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், இதனால் ஏற்படும் கூடுதல் செலவின தொகைக்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி வரும் வரை திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே, வெளிக்கொணர்வு முகமை மூலமாக தூய்மைப்பணியாளர்களை சப்ளை செய்து வரும் ஒப்பந்த நிறுவனத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 2021-2022ம் ஆண்டிற்கு தூய்மைப்பணியாளருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் 01.10.2022 முதல் நடைமுறைப்படுத்தவும், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) காலநீட்டிப்பு செய்தாலும் அரசினால் இடைப்பட்ட காலத்தில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்த உரிமம் வழங்கும் பட்சத்தில் பழைய ஒப்பந்தக்காரர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தமது ஒப்பந்த காலத்தினை முடித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1582/2015/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.94, நாள்: 30.09.2022**

**தீர்மானம்: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118-ன் படிசொத்துவரி வசூலலிக்க முடியாத தொகையினை (Power to write off irrecoverable taxes) திரும்ப பெற முடியாத வரிகளை தள்ளுபடி செய்யும் அதிகாரத்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள சொத்துவரி விதிப்புகளுக்கு கேட்பு அறிவிப்பு மற்றும் இறுதிஅறிவிப்புகள் கொடுக்கப்பட்டும், பலமுறை நேரில்சென்று பார்வையிடப்பட்ட பழுதடைந்த கட்டிடங்களும், சில கட்டிடங்கள் இடிக்கப்பட்டும், காலிமனை இடங்களுக்கு சில வரிவிதிப்புகள் செய்யப்பட்டு கணினியில் வரிவிதிப்புகள் நீக்கம் செய்யமாலும் கணினியில் தொடந்து நிலுவை கேட்புகள் வந்தவணம் உள்ளது. ஆதலால் 14.07.2022-ம் தேதிய வருவாய் ஆய்வாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர்களின் குறிப்பின்படி தெரிவிக்கப்பட்டுள்ள வரிவிதிப்புகளை இனி வரும் காலங்களில் சட்ட ரீதியாக வசூலிக்க இயலாத காரணத்தினால் மேற்கண்ட வசூல் செய்ய இயலாத சொத்துவரி விதிப்புகள் 2016-2013-ம் ஆண்டு முதல் 2021-2022-ம் ஆண்டு வரை ரூ.5,12,638/- மற்றும் அதே இனங்களுக்கான 2022-2023-ம் ஆணடுக்கும் உள்ள கேட்புகளை கணினியில் ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

அலுவலக குறிப்பு:

இந்நகராட்சியின் சொத்துவரி வசூல் 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு வசூல் செய்ய இயலாத தொகை ரூ.5,12,638/-க்கான சொத்துவரி கேட்புகளை நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.95, நாள்: 30.09.2022**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**